RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224109

OPEN ACCESS

# இலங்கைப் மாரியம்மன் கோயில் கட்டட அமைப்பு - பத்ததி முறையை முன்வைத்த ஆய்வு

**கி. கலைமகள் [அ, *], ச. கார்மேகம் [அ]**

[அ] நாட்டார் வழக்காற்றியல்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

# Sri Lanka Mariamman Temple Architectural Structure - A Study Proposing the Paththi Method

**K. Kalaimagal [a, *], S. Karmegam [a]**

[a] Department of Folklore, St.Xavier's College (Autonomous), Manonmaniam Sundarnar University, Thirunelveli, Tamil Nadu, India

* Corresponding Author: kalaimagak@esn.ac.lk

Received: 30-06-2022
Revised: 27-09-2022
Accepted: 06-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Art forms adapt to changes over time. They are a form of art that reflects the cultural dynamics of human life. Buildings also reflect social culture. People design architectural structures, places of worship, memorials, and various other structures according to their needs and in harmony with their lifestyle. As humans settled permanently in caves, they began to establish their habitats, and along with that, architecture developed. These buildings evolved to incorporate changes in scale, content, and design according to human developmental needs. It is important to understand what kinds of changes such developmental elements have undergone. Additionally, it is necessary to have a perspective on the trends of changes in the architectural design of the ten-decade rituals and temples in contemporary times. This article is framed in relation to the changes that occur in architectural structures due to such developmental trends.

**Keywords:** Sri Lanka Mariamman Temple, Architectural Structure, Social culture

## முன்னுரை

மட்டக்களப்பு பல் பண்பாட்டு மரபுடைய பகுதியாகக் காணப்படுகின்றது. இஸ்லாமியர், சைவர், கிறிஸ்த்தவர் என இணைந்து வாழும் ஒரு பகுதியாகவும் வாழ்வியல் முறைகளிலும் வணக்க முறைகளிலும் ஒவ்வொரு சமூகத்திற்குமான பங்களிப்பையும் தொடர்புகளையும் அவதானிக்கலாம். ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளும் இணைந்தும் அதேவேளை பிற பண்பாட்டு தாக்கங்களின் எச்சங்களைக் கொண்டவைகளாகவுமுள்ளன.

மட்டக்களப்பை அரச மரபின் ஆட்சி வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டவையாகக் குளக்கோட்டன் கல்வெட்டு, கொக்கட்டுச் சோலை தான்தோன்றீஸ்வரம் கோயில் செப்பேடு கல்வெட்டுக்களால் கயவாகு, கலிங்க மன்னக் சோழர் தாக்கங்கங்கள் போன்றவர்கள் ஆட்சிகள் இடம்பெற்றதற்கான சாட்சிகள் பரவிக்கிடக்கின்றன. (சி. பத்மநாதன், 2016: 32 -360)பாடப்பெற்ற திருத்தலமான திருக்கோனேஸ்வரத்தினையும் காலனிய ஆட்சி வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட தான்தோன்றீஸ்வர கோயில் போன்ற கோயில் வரலாறு இலங்கையின் வரலாற்றிலின் கட்டமைப்பிற்கும் மட்டக்களப்பின் பழம் வரலாற்றிக்குமான சாட்சிகளாகின்றன. இவை பெருங்கோயிலாகப் பேசப்படும் கோயில்களாயுள்ளன.

மட்டக்களப்பின் பத்ததி வழிபாட்டுச் சடங்குகள் காடுகளின் நடுவே, நீர்க்கரைஒரங்கள், வயல்வெளிப்பரப்புக்கள், போன்ற ஆரம்ப மனிதக் குடியேற்றங்கள் நிலவிய பகுதிகளில் வழிபாட்டு இடங்கள் அமையப் பெற்றுள்ளன. இவை ஆரம்பத்தில் நிலையான வழிபாட்டு கட்டட அமைப்புகளை கொண்டவையாக அல்லாமல் குறிப்பிட்ட நாள் மக்களினால் தெரிவு செய்யப்பட்டு பந்தல் போடப்பட்டு வழிபடப்படுகின்றது.

பத்ததி என்பது கோயில் தெய்வம் சார் தொன்மங்களையும் சடங்கு செய்வதற்கான முறையியல்களையும் உள்ளடக்கிய சடங்கு செய்வதற்கான முறைமை ஆகும். இது வாய்மொழி ரீதியாக கடத்தப்பட்டுவருகின்றது. தற்காலத்தில் இவை எழுத்துப்பனுவல்களாகவும் உள்ளன. ஆனால் இது பற்றிய முழுமையான அறிவு கொண்டவராய் தலமைப் பூசாரி காணப்படுவார். இவரே பத்ததி சார் அறிலை ஏனையவர்களுக்கு கடத்துவபராகக் காணப்படுவார். பத்ததியை அடிப்படையாகக் கொண்டு சடங்கு நடைபெறுகின்றது.

## பத்ததிக் கோயில் கட்டட அமைப்பு

தமிழர்களில் இந்துக்கள், சைவர்கள் வாழும் பகுதியில் பத்தாதிச் சடங்குகளையும் மண்றாடல் கொண்ட சடங்கு வழிபாடுகளையும் காணலாம். இவ் வழிபாட்டை ஆரம்பத்தில் பந்தல் அமைத்து முகக்களை கொண்டு செய்தனர். சடங்கு செய்வதற்கான குறிப்பிட்ட இடம் தெரிவுசெய்யப்பட்டு அப்பகுதியில் பந்தல் அமைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன. தங்களது மூதாதையர்களையும் காடுகளில் உறைந்துள்ள தங்கள் பெருமரங்களையும் கடவுளர்களாகக் கொண்டு வழிபட்டு வந்துள்ளனர். இச்சடங்கில் குறிப்பிட்ட இடத்தில் மரத்தினால் பந்தல் அமைத்து அதனை அலங்கரிக்கின்றனர். சடங்கிற்கான பொருட்கள் மக்களால் வழங்கப்படும். மரக்கம்புகள் நட்டு கொத்துக் குழை கொண்டு அமைக்கப்பட்ட பந்தல் அமைப்பு கீற்றுக்களால் களிகளால் அமைக்கப்படுகின்றன. பின்னர் கட்டடங்கள் கட்டும்முறை உருவாக்கப்படுகின்றது.

நான்கு கால்கள் நட்டு வரித்துக் கட்டி மேற்குப்பகுதி தட்டையாக அமைக்கபட்டு மேயப்படுகின்றது. பின்னர் நான்கு கால்களின் மேல் சிறு கூரைபோன்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் நான்கு கால்கள் அமைத்து முற்றாக அடைக்கப்பட்டு பந்தல்கள் போடப்பட்டு மேல் சிறு ஊசிமுனைக் கூரை அமைக்கப்பட்டது.

தேவைகள் அதிகரிப்பின் அடிப்படையில் பந்தல் முறை என்பது நிலையான கட்டமாக பரிணமித்தது. சடங்கிற்கான பொருட்களை ஒரே இடத்தில் வைத்தல் என்னும் தேவையின் காரணமாகவும் நிலையாகச் சென்று வழிபடுதல் நேர்த்தி வெலுத்தல் என்னும் நோக்கிலும் கட்டடம் என்பது தனக்குரிய அமைப்பினை உருவாக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் சிற குடிசையாக உருவாக்கத் தொடங்கிய பின்னர் சிறு குடிசையுடன் இணைந்து முன்னால் ஒரு அடைக்கப்படாத பகுதி உருவாக்கப்பட்டது. மனிதர்கள் நிற்பதற்கும் தெய்வங்கள் ஆடுவதற்கான இடமாக உருவாக்கம்பெற்றது. இது கட்டடமாக உருவாகக் தொடங்கியது. முகக்களை வைப்பதற்கான மூலம் ஒன்று அருகில் ஒரு அறை இவை முற்றாக அடைக்கப்பட்டதாகவும் அதன் பின்னால் பாதி திறக்கப்பட்ட மண்டபமாக கல்லினால் கட்டமைக்கப்படடது. இச் சடங்குக் கோயிலின் அமைப்பானது மூலம் வரை சென்று வருவதற்கான உரிமம் உடையவராய் மக்கள் அனைவரும் காணப்பட்டனர். கடவுளுக்கு மிக நெருக்கமானவர்களாக மக்கள் காணப்பட்டனர். இவற்றின கட்டடத்தன்மை என்பது மடங்களை அடிப்படையாக் கொண்ட கட்டடத்தன்மைகளாக உள்ளன.

மடம் என்பது முனிவர் வாழும் இடம் என்னும் அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது. அத்தோடு ஆச்சிரமம், சத்திரம் போன்ற சொற்களும் காணப்படுகின்றன. மடம் என்பது துறவிகள் வாழும் இடம் சத்திரம் என்பது வழிபோக்கர்கள் அவ்வழி வருபவர்கள் தங்கிச் செல்லும் இடமாகவும் வழங்கப்படுகின்றது (குமுதா சோமசுந்தரக் குருக்கள், 2007: 48).

ஓவ்வொரு சமயத்திலும் வாழும் துறவிகள் வாழ்வதற்கான இருப்பிடங்கள் என மடங்கள் உருவாகின்;றன. இவர்கள் பல இடங்களுக்கு சென்று மதத்தினை போதிப்பதுடன் வைத்தியம் செய்யும் குழுக்களாகவும் காணப்பட்டுள்ளனர். துறவறத்தினையும் நோய் தீர்க்கும் இடங்களாவும் மடங்கள் காணப்பட்;டுள்;ளன.

ஆரம்பகால வரலாற்றில் துறவிகள் வாழும் குடில்கள் என்னும் சொல்லும் தர்மசாலை என்னும் சொல்லும் பயன்பாட்டில் காணப்பட்டுள்ளது. களப்பிரர் வருகையில் பின் துறவிகளுக்காக வாழும் இடங்கள் உருவாக்கம் பெறுகின்றன. சைவ வைணவ மடங்கள் கட்டப்பபட்டன. இவை சமயரீதியான நடவடிக்கைகளுக்கும் யாத்திரைகளுக்கான மடங்களும் உருவாக்கம்பெற்றன.

சோழர் காலத்தில் பெருங்கோயில் வளர்ச்சியுடன் மடங்களும் வளர்ச்சி அடைகின்றன. மூன்றாம் இராஜ இராஜன் காலத்தில் கோயில்களின் ஒரு பகுதியாக மடங்களும் இயங்கி வந்துள்ளன. மடம் என்பது துறவிகளுக்கான இடமாகவும் பின் தன் வளர்ச்சியில் சைவத் தொண்டாற்றும் தொண்டாற்றுபவர்களுக்கான இடமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது.


மட்டக்களப்பில் சடங்குக் கோயில்களின் மடாலயப் பாணி என்பது அவ் மக்கள் நிலையாக தங்கி வாழ்தலில் இருந்து நிலையான கட்டங்கள் உருவாகின்றன. இக் கட்டங்கள் மக்கள் அனைவரும் இணைந்து வழிபடும் செய்தல்; என்னும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. முக்கிய நோக்கமாக நிலையான முயற்சியில் தேவையை அடிப்படையாகக் கொண்ட கட்டடடமாக உருவாக்கம் பெறுகின்றது.

## மட்டக்களப்பின் மடாலயங்களின் வளர்ச்சிப்படிநிலை

மனிதர்கள் நிலையாக வாழத்தொடங்கியதும் கல்லினால் அமைந்த ஊசிக் கூரை, வளைவுகள் கொண்ட வீட்டமைப்பு முக்கியம் பெற கோயில்களும் அத்தகைய பண்புகளைப் பெறுகின்றன. நிலையான கட்டட அமைப்பு என்பது பந்தலினை பின்பற்றயதாக உருவாக்கப்படுகின்றது. முகக்களை வைப்பதற்கான பகுதி மூன்று படிகளைக் கொண்ட மூலமூர்த்திப் பகுதிகளாகவும் முன் மண்டபம் போன்ற முற்றாக அடைக்கப்படாத பகுதியும் அதனைச் சுற்றி பரிபாலத் தெய்வங்களுக்கான பகுதியும் உருவாக்கப்படுகிறது.

கட்டடம் என்பது மனிதத் தேவையினை அடிப்படையாகக் கொண்டதாய் வளர்ச்சி பெறுகின்றது. அவ்வாறு உருவாகப்பட்ட கடடக்கலை என்பது மனித வாழ்வியல் கூறுகளையும் பிரதிபலிக்கின்றது. பந்தல் அமைப்பில் சடங்கிற்கான பொருட்கள் பூசாரி தலைவர் போன்றவாகளின் வீடுகளிலிருந்து எடுத்துச் செல்லப்படுவது பட்டெடுத்தல், மடை கொண்டு செல்லல் போன்ற சொற்பிரயொகங்கள் காணப்படுகன்றன. இவற்றினை நிவர்த்தி செய்யவும் முகக்களை, விக்கிரங்கள் அங்கே வைக்கவும் கட்டடங்கள் வழிகோலின. நிலையான கட்டங்கள் என்பது பாதுகாப்பானதாக உணரப்படுகின்றது.

பந்தல் அமைப்பின் அடுத்த கட்டவளர்ச்சியில் உருப்பெற்ற பத்ததிக் கோயில் அமைப்பு.



(மதீஸ்குமார், ஓவியர்)

சாதாரண வாழ்வியலுடன் ஒத்த கட்டட அமைப்பு முற்றாக அடைக்கப்படாத தன்மை என்பவற்றுடன் அனைவரும் பங்குபெறக் கூடியதான அமைப்பாகக் காணப்படுகின்றது.

பெருங் கோயில்கள் களஞ்சியங்களாகவும் பொக்கிசங்களாகவும் பாதுகாக்கப்பட்டன. வரலாற்றில் பிற படையெடுப்புக்களின் கொள்ளையடிப்பு என்பது கோயில்களை மையப்படுத்தி இருப்பதனை வலராற்றில் அறியக்கக்கிடக்கிறது. ஆனால் பத்திக்கோயில் அமைப்பு என்பது சாதாரண மக்களுடையதாக காணப்படுகின்றது. மக்கள் அனைரும் இணைந்து குறிப்பிட்ட நாளினைத் தெரிவு செய்வதிலிருந்து சடங்கு செய்வது வரை மக்கள் சார்ந்ததாய் காணப்படுகின்றது.


இதனை உள்வாங்கியதாய் கட்டங்களும் அமைக்கப்பட்டன. மறுஜென்மக் கோட்பாடுகளையும் இறப்பிற்கு பின்னரான வாழ்தலையும் இவ் வழிபாடு பேசவில்லை. தற்காலச் சூழலில் மனிதர்கள் இணைந்து வாழ்வதும் இணைந்து மூதாதைகளை இயற்கையை வழிபடும் வழிபாடாகக் காணப்பட்டது.

இக்கருத்தியலினைக் கட்டங்களும் பிரதிபலித்தன. முற்றாக அடைக்கபடாத ஆலய அமைப்பு பத்ததிக் கட்டடக்கலையின் முக்கியமானதாக காணப்படுகின்றன. கூரை மோடும் அதற்கு முன்னர் அடைக்கப்படாத கூரைஅமைப்பினை கொண்ட வரிந்த பகுதி என்பது இதன் கட்டக்கலையாக அமைகின்றது.

இக் கட்டடம் தூண்களையும் அடிப்படையாகக் கொண்ட கூரை, தென்னோலை, ஓட்டினால் உருவாக்கபடுகின்றது. ஒவ்வொரு கோயிலும் தங்களது பொருளாதார அம்சத்திற்கு ஏற்ப அமைந்தன.

மண்டபங்கள் விரிவுபடுத்தப்பட்டன. முகக்களை கருவறை அதனை ஒட்டி ஒரு சிறு மண்டபம் பெருமண்டபம் மண்டபக் கதவுகள் வளைவுகளை கொண்டவையாக காணப்படுகின்றன. எப்பக்கத்திலும் வருவதும் போவதும் பின்னர் வெளியிலிருந்தும் உள் நடப்பவற்றை பார்க்கக் கூடிய வகையில் அமையப்பெற்றுள்ளது. பெண், ஆண் என அனைவரும் ஓரிடத்தில் நின்று வழிபடவதற்கான அமைப்பினை கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. அத்தோடு கட்டட நிகழ்ச்சித்தன்மை அனைவரும் இணைந்து வழிபடும் நிலையை உருவாக்கி இருந்தது.

இவ் வளர்ச்சியின்படி கருவறை, தொடர்ந்து அடைக்கப்பட்ட மண்டபம், வெளி மண்டபம் மண்டபங்கள் அதிகரிக்கப்படுகின்றன.



(மதீஸ்குமார், ஓவியர்) படம் 2 இக்கட்டடம் அதன்அடுத்த கட்ட வளர்ச்சியாகும்.

மக்கள் அனைவரும் கூடும் வெளியினை உருவாக்கல். என்பதோடு மண்டபங்களின் அதிகரிப்பு என்பது மனிதர்களிக்கிடையிலான அதிகாரத்தினை அதிகரிக்கச் செய்கின்றது. ஆரம் கட்டட வளர்ச்சி என்பது கட்டடஅமைப்பினைத்தாண்டி இயற்கைச் சூழல் கவனிக்கப்பட்டது. அடுத்த கட்டம் கோயில்கள் சமூகப்பொருளாதார அடையளப்படுத்தலாய் ஒவ்வொரும் சமூகமும் தங்களது கோயில்கள் ஊடான அடையாளப்படுத்தலுக்கு முனைகின்றது.

மண்டபங்களின் அதிகரிப்பு என்பது பெண்களை வெளிமண்டபத்தோடு உள்நுளைதலை கட்டுப்படுத்துகின்றது. உள் சென்று வழிபடக் கூடியவர்கள் ஆண்களாகின்றனர். அத்தோடு பல்சமூகத்தவர்கள் வந்திருந்து தங்கள் நேர்த்தி செலுத்தக் கூடிய தளம் என்பது வரையறுக்கப்படுகின்றது.

அடுத்த கட்ட வளாச்சி என்பது இந்து என்னும் பெரும் பரப்பிற்குள் நுழைகின்றது. ஆகமம் சார் கட்டடத்தன்மைகளை உள்வாங்கின்றது. கோபுரம் என்பது முக்கியம் பெறுகின்றது. பத்ததிக் கோயில்கள் கம்பாவிஷேகக் கோயில் வழிபாட்டுமுறையாக மாற்றப்படுகின்றன.

இத்தகைய மாற்றம் என்பது அதன் கட்டடத்தில் செல்வாக்குச் செலத்துகின்றது. ஆலயவழிபாட்டு கோயில் கட்டமைப்பிற்குள் தன்னைப்பொருத்திக் கொள்கின்றது. இத்தகைய பொருத்தப்பாடு சமூகம் கௌரவமாகக் கொள்படுகின்றது. பத்ததி வழிபாட்டு முறைகளில் இருந்து சமஸ்கிருத மயமாக்கல் நோக்கி கோயில்கள் நகர்கின்றன. கோபுரம் கட்டமைப்புக்களை பின்பற்றத் தொடங்குகின்றன. முகக்கறை விக்கிரகங்களாய் மாற்றம் அடைகின்றது. பத்ததிக் கோயில் கட்டடமைப்பு மாறத் தொடங்குகின்றது.

## கோயில் கட்டடம் வழி அடையாள உருவாக்கம்

அடையாளம் என்பது நவீன, காலனிய கருத்தியல்களின் உள்பத்திகளாய் உள்ளன. இலங்கைகையில் எல்லைகளை வகுப்பதற்கும் சமூகங்களுக்கிடையிலான அடையாளத்தினை உருவாக்குவதன் ஊடாய் தேசம் என்னும் ஒன்றை காலனியம் உருவாக்குவதற்கு வித்திட்டது. ஒவ்வொரு சமூகத்தவர்களுக்கும் முனைப்புடன் தங்கள் எல்லைகளை வகுத்துக்கொள்வதன் வாயிலாக பண்பாட்டு அடையாளம் என்னும் ஒன்றை உருவாக்கத் தலைப்பட்டனர். 'காலனிய அறிவு அடையாளங்களை கற்பனை செய்யவோ கட்டியெழுப்பவோ இல்லை. மாறாக அரசியல் அடையாளங்களில் மூகிழ்வதற்கான புதிய அதிகார எல்லைளை திறந்து விட்டது" (சகங்க பெரேரா, 2005 : 64)

இங்கு காலனியம் என்பது தனித்து ஒரு கோட்பாடாக அல்லாமல் அது பல கருத்தியல் விமுறைகள் என்பவற்றின் தொகுப்பாக உள்ளது. (தா.சனாதனன், 2020: 1) காலனிய அறிவியலின் பின்னர் கலைகள் என்பவை அடையாளத்தின் ஒரு பகுதியாக மாற்றப்படுகின்றது. அடையாளம் சமூகத்தேவையாகவும் உணரப்படும் சூழலைக் காணலாம். இறந்த கால எச்சங்களிலிருந்து நிகழ்கால இருப்பினையும் அடையாளத்தினை உருவாக்க முனைந்தனர். அடையாளம் என்னும் சொல் ; காலனிய அறிவியல் வழி உருப்பெறுகின்றது. ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் இருந்து தன்னை வேறுபடுத்த முனைகின்றனர்.

கலை, இலக்கியத்தில் பல சோதனை முயற்சிகள் இடம்பெற்றன. மேற்குலகக் கலையானது மேற்குலகு சாராத பண்பாடுகிளிலிருந்து தனது மூலங்களைப் பெற்றுக்கொண்டது. ஆனால் பாரம்பரிய கருத்தியலிருந்து தன்னை முற்றாக விடுவித்துக்கொண்டிருந்தது.

இயந்திரங்களின் வருகை பௌதீக உழைப்பை மாற்றிடு செய்வதும் ஆற்றலை பன்மடங்கு அதிகரிப்பதற்கான இயந்திரங்க்ள் முக்கியம் பெற்றன. இயற்கையுடன் ஒத்துப்போதல் என்பதனை தாண்டி இயற்கையை மனிதனுக்கு ஏற்றால் போல் பயன்படுத்தல் அல்லது மாற்றியமைததல் என்பதாய் பயன்பட்டது. தொழித்துறை முதலீடுகளையும் முதலாளிய வர்க்கத்தனரையும் மத்தியதர வர்க்கத்தினையும் உருவாக்கியது.

மனிதர்கள் சமயங்களை மூடநம்பிக்கைகளை கட்டுக்கதைகளை அவதானித்தனர். மூடநம்பிக்கைகளிலிருந்து விடுப்பிதாக கூறினார்கள். நவீன இயந்திரங்களால ஆன உற்பத்தி கைகளால் உருவான பண்டங்களை மாற்றீடு செய்தது. இது பாரிய உற்பத்தியாக உற்பத்தியினை நிர்வகிப்பவர்கள் முடிவுகளை மேற்கொள்பவர் முதலாளிய உரு மாற்றம் நடந்தது. பொருட்களுக்கும் மனிதர்களுக்குமான தொடர்பு குறைய ஆரம்பித்தது.

காரண காரிய ரீதியல் விளக்கவும் உண்மை பொய் அறியவும் முற்படுகின்றனர். இந்நிகழ்வு கலைகளிலும் பிரதிபலித்தது. புதுமை என்பதும் புதிதாக ஒன்றனை கண்டுபிடித்தல் என்பதும் பேசப்படலாயின. இத்தகைய பொருளாதாரச் சூழல், தேசிய வாதம் என்பதனை உற்பத்தி செய்தல் இத் தேசியவாதம் பிற பண்பாட்டினை கொண்ட மக்களை எதிரிகளாக்கின. பல் தன்மை பண்பாடு கொண்ட மக்களை ஒற்றைத்ததன்மை வாழ்வியலுக்குச் இட்டுச் சென்றது. இந் நிலை சமூகத்தின் மையநீரோட்டமாக காட்சிப்படுத்தப்பட்டன.

இறந்த கால நிகழ்வு வாழ்வியல் எச்சங்களிலிருந்த எதிர்காலத்தினை உருவாக்க எத்தனிப்பதன் இவ் எத்தனிப்பு என்பது அடையாளம் என்பதனை உருவாக்கத் தொடங்கியது. அடையாளம் என்பதில் இனம், தேசியம். மொழி செல்வக்குச் செலுத்தின. இவ் அடையாளம் இறுக்கத்தன்மை உடையதாய் பொது நீரோட்டத்தினை அல்லது தங்கள் அடையாளங்களின் பெரும் அரசியலில் பரப்பிலிருந்து உருவாக்கத் தலைப்பட்டன.

குறிப்பாக சைவம், வைணவம் என்பது இந்துதத்துவத்தின் அடிப்படையானது. இலங்கைவாழ் இஸ்லாம் என்பது அரபிய இஸ்லாம் ஆகவும் சைவர் என்பவர்கள் இந்திய இந்து என்னும் அதிகார வெளிக்குள் நுழைய தலைப்பட்டனர். ஒவ்வாரு இனமும் தனக்கான இறுக்கமான அடையாளத்தினை உருவாக்கின. இவ் இறுக்கமான அடையாளம் தகவமைப்பு பிற மக்கள் பண்பாட்டினை தனக்கெதிரான பண்பாடாக கற்பிதம் செய்தது. இதன் பிரதிபலிப்பாக குறிப்பாக ஆலயங்கள் உருவாக்கப்பட்டன. இதன் பிண்ணனியில் பத்ததி சடங்குக் கோயில்கள் பந்தல் அமைப்பில் இருந்து மடலாய அமைப்பினைக் கொண்ட கோயில்களிலிந்து கோபுரம், விமானம் கொண்டமைந்த சமஸ்கிதமயமாக்கல் சார் கட்டமைப்பினை பின்பற்ற முனைந்திருப்பதனை அதன் கட்டடப்போக்குகளில் இருந்து காணலாம்.

இத்தகைய மாற்றங்கள் கட்டடவளர்ச்சியாய் கௌரவத்தினை இட்டுத்தரும் வணக்கமுறை கொண்ட கட்டடத்தன்மையாகப் பார்க்கப்பட்டன. கோயிலுக்குள் உடபிரவேசிக்க கூடியவர் யார் என்னும் அதிகார நிலை ஏற்படுத்தப்பட்டன. மூடநமபிக்கைகளாக நாகரீகமடையாத பண்பாடாக பத்ததி சடங்கு முறைகள் கருதப்பட்டன. சமூகப்பங்களிப்பினைக் கொண்ட பத்ததிச் சடங்குவெளியில் தற்கால வளர்ச்சி என்பது குறிப்பிட்ட அடையாளத்தினை பின்பற்றும் மக்களுக்கானதாக மாற்றம் பெறுவதாக உள்ளன.

## References


Kumutha Somasundara Kurukkal. (2007). Monasteries and Monastic Architecture in Jaffna Culture. Kumaran Book House, Colombo.

Professor Pathmanathan. C. (2016). History of Sri Lankan Tamils: Nagas and Tamils in Sri Lanka (250 BC - 300 AD). Department of Hindu Religious and Cultural Affairs, Colombo.

Sahang Perera, Sanathanan, T., Akilan, P., Reading Sri Lankan Society and Culture: Selected Articles, Volume Three (2000 – 2005), Colombo Institute for Social and Cultural Studies.

Sanathanan, T., (2020) Modernism, Western Modernism: An Introduction - Painting and Sculpture, Kumaran Bookshop.

Vidwan K.O.U. Natarasa. (1998). Batticaloa District Cultural Council, Batticaloa.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License